# அச்சுறுத்தல்களுக்கும், கைதுகளுக்கும் தி.மு.க. ஒருபோதும் அஞ்சாது!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆவேசம்!

**நெல்லை, ஜூலை 24 -**

**அச்சுறுத்தல்களுக்கும் கைதுகளுக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒருபோதும் அஞ்சாது என கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பின்போது கூறினார்.**

அவரது பேட்டி வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய்யை அவதூறாகப் பேசியதாக தொடரப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், விசாரணைக்குப் பின்னர் 15 நாட்கள் நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது. இதையடுத்து, அவர் திருநெல் வேலி மாவட்டம் பாளையங்கோட்டை மத்திய சிறைக்கு மாற்றப்பட்டார்.



இந்நிலையில், அவரது கைது நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்திருந்த தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி., நேற்று முன்தினம் விமானம் மூலம் மதுரை வந்தடைந்தார். பின்னர் பாளையங்கோட்டை சென்ற கனிமொழி, மத்திய சிறையில் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

### தலைவர் கலைஞர் இருந்த சிறைச்சாலை! மார்க்கண்டேயனுக்குப் பெருமை!

இந்த சந்திப்பிற்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி, பாளையங்கோட்டை சிறைச்சாலைஎன்பதுதிராவிடமுன்னேற்றக் கழகத்திற்குப் புதிதான இடமல்ல. 1965ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்த சிறைச்சாலை இதுதான். எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த யார் இந்த சிறைச்சாலைக்கு வந்தாலும், அதை ஒரு பெருமையாகவே கருதுவார்கள். அந்த வகையில், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனும் இதை பெருமையுடன் ஏற்றுக்கொண்டு சிறையில் இருக்கிறார்.

### சிறைக்கு அஞ்சக் கூடியவர்கள் இல்லை தி.மு.க.வினர்!

அதுமட்டுமல்லாமல், இதுபோன்ற அச்சுறுத்தல்கள், வழக்குகள், கைதுகள் என எதற்கும் பயப்படக்கூடியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் யாரும் இல்லை. எத்தனை பொய் வழக்குகள் தொடரப்பட்டாலும், அவற்றை சட்டரீதியாக எதிர்கொண்டு சந்திப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகமும், எங்களுடைய தலைவர்களும் எப்போதும் தயாராகவே இருக்கிறோம்.

இன்றைக்கு சட்டம் ஒழுங்கு தமிழ்நாட்டில் எந்த நிலையில் இருக்கிறது என்பது அத்தனை பேருக்கும் தெரியும். ஒவ்வொரு நாளும் பெண்கள்,குழந்தைகளுக்கு எதிராக குற்றங்கள் நடந்து கொண்டிருக்கிறது.இப்படியான சூழலில், ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், அவரை முறையாக விசாரிப்பதற்குக்கூட அரசு தயாராக இல்லை. இதுபோன்ற நடவடிக்கைகள் பல்வேறு கேள்விகளையம், சந்தேகத்தையும் எழுப்புகிறது.

விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் தவறாகப் பேசினார் என்பதற்காக கைது செய்து சிறையில் அடைக்கக்கூடிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்குமுன்பு அனிதா ராதாகிருஷ்ணன் மீது வழக்கு போடப்பட்டு,கைது செய்து சிறையில் அடைக்க முயற்சி செய்தார்கள்.

### மக்கள் மீது அக்கறை இல்லாத த.வெ.க. அரசு!

மேலும், ஒவ்வொரு முறையும் தங்களது கருத்துகளை வெளிப்படுத்தும் யூடியூபர்கள் மற்றும் சமூக வலைதள இன்ப்ளூயன்சர்களை கைது செய்து சிறையில் அடைக்க இந்த அரசு தொடர்ந்து முயற்சித்து வருகிறது. த.வெ.க. அரசுக்கு மக்கள் மீது உண்மையான அக்கறையோ, கவலையோ, நம்பிக்கையோ இல்லை. காவல்துறையை பயன்படுத்தி எதிர்க்கட்சிகளின் குரலை ஒடுக்குவதிலேயே இந்த அரசு கவனம் செலுத்தி வருகிறது.

த.வெ.க.வை சார்ந்தவர்கள் எங்களுடைய முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலகட்டத்தில் எவ்வளவு விமர்சித்து பேசி இருக்கிறார்கள் என்பதை அனைவரும் பார்த்திருக்கிறோம். அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிப்பட்ட நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. த.வெ.க. வினருக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லை. யார் தன்னை விமர்சனம் செய்தாலும் அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவம் அவர்களிடம் இல்லை.

### பா.ஜ.க. பாதையில் த.வெ.க. அரசு!

யாருடைய பெயரையும் நேரடியாகச் சொல்லாமல் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் பா.ஜ.க. என்ற பெயரைச் சொல்வதற்குக்கூட தயங்கும் நிலையில் தான் இந்த ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

### தமிழ் நாட்டின் நலனே தி.மு.க.வின் கொள்கை!

த.வெ.க. யாருக்குப் பயந்து அரசியல் செய்கிறார்களோ, அதே பாதையில்தான் அவர்களும் அரசியல் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பா.ஜ.க.வுக்கு எதிராக தங்களுடைய கருத்துகளை பதிவு செய்பவர்களையும், ஜனநாயக ரீதியில் போராடுபவர்களையும், போராட்டத்தில் ஈடுபடும் மாணவர்களை கையாள்வது போன்று காவல் துறையை பயன்படுத்தி அடக்குவதையே த.வெ.க. அரசு மேற்கொண்டு வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் தனது கொள்கைகளிலும், கருத்துகளிலும், குறிப்பாக தமிழ்நாட்டின் நலன் என்று வரும்போது எப்போதும் எந்த சமரசத்திற்கும் இடமளித்ததில்லை; இனியும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. தலையங்களுக்கும், அனுமானங்களுக்கும் நாங்கள் பதிலளிக்க முடியாது. இருப்பினும், கடந்த முறை கொண்டு வரப்பட்ட மசோதா தொடர்பாக எங்களுடைய கருத்துகளை மிகவும் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறோம். அந்தக் கருத்துகளுக்கு உரிய மதிப்பளிக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு.

### தமிழ்நாட்டின் உரிமைகளில் ஒருமித்த கருத்துடன் செயல்பட வேண்டும்!

எந்தக் காலத்திலும் அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் நெருங்கியதில்லை. கடந்த காலங்களில் தமிழ்நாட்டிற்காகப் போராடக் கூடிய சூழலில் உரிமைகளுக்காகவும் , நதிநீருக்கான கோரிக்கைகளுக்காகவும் ஒன்றாகக் கூட்டங்கள் நடத்தப்பட்டு பின்னர் பிரதமரை சந்தித்திருக்கிறோம்.தமிழ்நாட்டின் உரிமைகளில் எல்லா கட்சிகளும் ஒருமித்த கருத்தோடு பேச வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற் றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தக்கூடிய கருத்து.

நீட் தேர்வுக்கு எதிராக மாணவர்களுடைய போராட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் கருத்துக்களை பதிவிட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமில்லாமல் நீட் தேர்வு கைவிடப்பட வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம். மேலும் மாணவர்களுடைய எதிர்காலத்தை பாதிக்கக்கூடிய அளவிற்கு இந்த வினாத்தாள் கசிவு மற்றும் தேர்வுகள் சரியாக நடத்தப்படுவதில்லை என்ற சூழலில் இருக்கிறது.மாணவர்களுடைய போராட்டத்தை ஒடுக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு எதிராக நடக்கும் வன்முறையை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளாது.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டியளித்தார்.

---

### கர்நாடகா முதலமைச்சரிடம் தண்ணீரைக் கேட்டுப் பெறவிடாமல் தடுப்பது

# கல்லாப்பெட்டி காங்கிரஸா? டெல்லி எஜமானர் பா.ஜ.க.வா?

## சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, ஜூலை 24 -

கர்நாடக முதலமைச்சரிடம் தண்ணீரைக் கேட்டு பெற விடாமல் தடுப்பது கல்லாப்பெட்டி காங்கிரஸா? அல்லது டெல்லி எஜமானர் பா.ஜ.க.வா, என முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.



இது தொடர்பாக முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

‘நீட்’ தேர்வுக்கு எதிராக தலைநகர் டெல்லியில் ஜந்தர் மந்தர் மைதானத்தில் காக்ரோச் ஜனதா பார்ட்டி இளைஞர்கள், இளம் பெண்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் லட்சக்கணக்கில் திரண்டு காவல்துறையின் தடியடி,கண்ணீர் புகை குண்டுகளுக்கு கலங்காமல் அறவழியில் போராட்டத்தை தொடர்கிறார்கள்.

ஊழல் ஒழிப்பு என்ற பெயரில் இதே ஜந்தர் மந்தரில் அப்போதைய காங்கிரஸ் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எதிராக பா.ஜ.க. கட்சி அன்னா ஹசாரே தலைமையில் உண்ணாவிரதம் மேற்கொண்ட போது ஓடோடி சென்று ஆதரவு குரல் கொடுத்த CMsir தற்போது எங்கு பதுங்கி இருக்கிறீர்கள்?

டெல்லி காவல்துறை மக்களுக்காக போராடும் நம் இளைஞர்களை கண்மூடித்தனமாக தாக்கி மண்டையை உடைத்த போதும் கண்டன குரல் எழுப்பாமல் மௌனம் காப்பது ஏன் CMsir?

உங்கள் நண்பர் பாடகர் அறிவை சென்னை கோட்டை முன் கோசம் இடுவது போல் குரல் எழுப்ப செய்து உடனே உங்கள் அறைக்கு அழைத்துப் பேசி நடத்திய நாடகம் தமிழ்நாட்டில் சந்தி சிரிக்கிறது CMsir?

நாடே கொந்தளித்து நிற்க த.வெ.க.வும் உங்கள் தோழமைக் கட்சிகளும் ஜனநாயகன் பட வெளியீட்டு விழாவை கொண்டாடி மகிழும் உங்களுக்கு மனசாட்சியே இல்லையா?

காவேரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்ட பிறகும் தண்ணீர் தர மறுக்கும் கர்நாடக அரசை கண்டிக்க உங்களுக்கும் உங்கள் தோழமை கட்சிக்கும் துணிவில்லையா? கர்நாடகா முதலமைச்சரிடம் தண்ணீரைக் கேட்டு பெற விடாமல் தடுப்பது கல்லாப்பெட்டி காங்கிரஸா? அல்லது டெல்லி எஜமானர் பா.ஜ.க.வா?

தமிழ்நாட்டின் உரிமைகளை தொடர்ந்து காவு கொடுக்கும் உங்கள் அரசை மக்கள் மிக விரைவிலேயே தூக்கி எறிந்து தக்க பாடம் புகட்டு வார்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் கடம்பூர் பகுதியைச் சேர்ந்த இருநூறுக்கும் மேற்பட்ட மாற்றுக்கட்சியினர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். அவர்களை வரவேற்றுப் பேசிய பி.கீதாஜீவன் கழகத்தில் இணைந்து ஆக்கபூர்வமாக செயல்பட்டு கழகத்தலைவரின் கரங்களை வலுப்படுத்துவோம் என்றார். இந்நிகழ்வில் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், பேரூர் கழக செயலாளர்கள் சின்னப்பாண்டியன், பாலகுமார், கடம்பூர் இளைய ஜமீன்தார் எஸ்.வி.எஸ்.பி. நாகராஜா , ஜெயராஜ், முருகன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டனர்.

---

### தி.மு.க. ஆட்சிக் காலத்தில் – ஜவுளித் துறையில்

# வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் தமிழ்நாடு முதலிடம்!

## மக்களவையில் தகவல் – ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ செய்தி!

**சென்னை, ஜூலை 24 -**

**தி.மு.கழக ஆட்சியில் 2026 மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி ஒன்றிய அரசின் ஜவுளித்துறையில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடம் வகித்து சாதனை படைத்துள்ளது.**

அத்துடன் ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தி மையமாகவும் இருந்து அக்கால கட்டத்தில் தொடர்ச்சியான ஆதிக்கத்தை செலுத்தி வந்துள்ளது.

தமிழ்நாட்டின் இந்தச் சாதனை தொடர்ந்து மக்களவையில் தெரிவிக்கப்பட்டது குறித்து ‘தி டைம்ஸ் ஆப் இந்தியா’ வெளியிட்டுள்ள செய்தி வருமாறு:

ஒன்றிய அரசின் ஜவுளித் துறைக்கான உற்பத்தி சார்ந்த ஊக்கத் திட்டத்தின் கீழ், நாட்டில் உருவாக்கப்படும் வேலைகளில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்கைத் தமிழகம் உருவாக்கி, மிகப்பெரிய வேலைவாய்ப்பு உருவாக்கும் மாநிலமாக உருவெடுத்து சாதனை படைத்துள்ளது.

எம்.எம்.எஃப். ஆடைகள், எம்.எம்.எஃப். துணிகள் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் ஆகியவற்றின் உற்பத்தியில் முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம், ஜவுளித் திட்டம் வேலைவாய்ப்பை உருவாக்கவும் தமிழதகம் பங்களித்துள்ளது.

மக்களவையில் பகிரப்பட்ட தரவுகளின்படி, 2026 மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி, 170 நிறுவனங்கள் ரூ. 8,117.64 கோடி முதலீடு செய்ததன் மூலம், இத்திட்டம் இந்தியா முழுவதும் 33,427 வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகளில் சுமார் 24% தமிழ்நாட்டில் கிடைத்துள்ளன. இது, இந்தியாவின் ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தி மையமாக அம்மாநிலத்தின் தொடர்ச்சியான ஆதிக்கத்தை எடுத்துக்காட்டுகிறது.

PLI திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட முதலீடுகளில் குஜராத், கர்நாடகா மற்றும் கோவாவுக்குப் பின்னால் தமிழ்நாடு நான்காவது இடத்தைப் பிடித்தது.

இருப்பினும், வேலைவாய்ப்புப் பட்டியலில் அது முதலிடம் பிடித்தது; இது, மூலதன முதலீட்டைப் பெரிய அளவிலான உற்பத்தி வேலைகளாக மாற்றும் மாநிலத்தின் திறனைக் குறிக்கிறது.

PLI திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள 17 நிறுவனங்கள் மொத்தம் ரூ. 1,277.16 கோடி முதலீடு செய்துள்ளன.

குஜராத் 46 நிறுவனங்களிடமிருந்து ரூ. 1,903.38 கோடி என்ற அதிகபட்ச முதலீட்டை ஈர்த்தபோதிலும், அது தமிழ்நாட்டை விடக் கணிசமாகக் குறைவான 4,493 வேலைவாய்ப்புகளையே உருவாக்கியுள்ளது.

கர்நாடகா, ரூ. 1,515.99 கோடி முதலீடுகளுடன் 5,611 வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. கோவா, ரூ. 1,355.87 கோடி என்ற ஒற்றை முதலீட்டிலிருந்து 692 வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

தமிழ்நாட்டின் கைவினைப்பொருட்கள் உள்ளிட்ட ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதி, 202425 நிதியாண்டில் ரூ. 67,863 கோடியாக இருந்த நிலையில், 202526 நிதியாண்டில் 1.4% வளர்ச்சி பெற்று ரூ. 68,792 கோடியாக இருந்தது. திருப்பூரின் கைவினைப்பொருட்கள் உள்ளிட்ட ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதி, 2025 நிதியாண்டில் ரூ. 37,564 கோடியாக இருந்த நிலையில், 2026 நிதியாண்டில் 3% வளர்ச்சி பெற்று ரூ. 38,676.5 கோடியாக இருந்தது.

“அளவை அதிகரிப்பதற்கு எப்போதும் ஒரே ஒரு பெருநிறுவனம் மட்டும் தேவையில்லை என்பதை திருப்பூர் நிரூபித்துள்ளது. சுமார் 2,000 தொழிற்சாலைகள் மற்றும் 20,000 சிறிய அலகுகளின் கூட்டு முயற்சியால் இந்தத் தொகுப்பு வளர்ந்து, ஒரு பிரத்யேக பின்னல் ஆடை உற்பத்திச் சூழலமைப்பை உருவாக்கியுள்ளது,” என 360 ஒன் கேப்பிட்டல் நிறுவனத்தின் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.